## அடுத்த தலைமுறைக்காகவும் உழைக்கும் ஒரே தலைவர்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி மீண்டும் அமைந்திட கடுமையாக உழைப்போம்!

## தென்காசி சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் – கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

**தென்காசி, மே 17–**

**‘அடுத்த தலைமுறைக்காகவும் சிந்திக்கும் ஒரே தலைவர் முதல்வர் தளபதி’ என்றும் ‘முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி மீண்டும் அமைந்திட கடுமையாக உழைப்போம்’ என்றும் தென்காசி மாவட்டம் சிவகிரி சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்.**

தென்காசி மாவட்டம், சிவகிரியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 101வது பிறந்த நாள் நினைவு கொடிகம்பத்தில் கழக கொடி யேற்றி வைத்து, சிவகிரியில் வேல்ஸ் கேர் மருத்துவமனை மற்றும் மருத்துவமனை வளாகத்தில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலை ஆகிய வற்றை திமுக துணைப் பொதுச்செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழு தலைவருமான திருமிகு.கனிமொழி கருணாநிதி அவர்கள் திறந்து வைத்தார்!

அதனைத் தொடர்ந்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைத்து நான்கு ஆண்டுகள் நிறைவு பெற்றதை தொடர்ந்து தென்காசி வடக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத் தின் சார்பில் சிவகிரி பேருந்து நிலையம் அருகில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு என்ற தலைப்பில் நடைபெற்ற சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு கனிமொழி கருணாநிதி அவர்கள் சிறப்புரையாற்றினார்

முன்னதாக, சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் மாற்றுத் திறனாளி களுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட மோட்டார் வாகனங்களை வழங்கினார்!

பொதுக்கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் ஆற்றிய உரை வருமாறு...

“நமது முதலமைச்சர் அண்ணன் தளபதி ஆட்சி பொறுப்பை ஏற்றுக் கொண்ட பொழுது ஒரு உறுதி அளித்தார்கள். அது என்ன உறுதி என்றால் எனக்கு வாக்களித்தவர்களுக்கும் எனக்கு வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்த ஒரு ஆட்சியை தருவேன். வாக்களிக்காத மக்கள் ஏன் இவர்களுக்கு நாங்கள் வாக்களிக்காமல் விட்டுவிட்டோம் என்று வருந்தக்கூடிய அளவிற்கு நான் நடத்திக் காட்டுவேன் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு உறுதியளித்தார்கள். இன்று அந்த உறுதியை தன்னுடைய நான்காண்டு ஆட்சியிலே நிறைவேற்றி காட்டி இருக்கக்கூடிய ஒரு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள்.

தனக்கு வாக்களித்த மக்களையும் இணைத்துக்கொண்டு அதே நேரத்திலே மற்றவர்களை எதிரணியிலே இருப்பதாக நினைத்துக் கொண்டு நமக்கு வாக்களிக்காதவர்களுக்கும், திராவிட மாடல் ஆட்சி என்றால் அனைவருக்கும் உள்ளடக்கிய ஆட்சி அனைவரையும் ஒற்றுமை படுத்தக் கூடிய ஒரு ஆட்சி என்பதை ஒவ்வொரு நாளும் நிரூபித்துக் கொண்டிருக்கக் கூடிய ஆட்சிதான் திராவிட முன்னேற்ற கழக ஆட்சி.

கொரோனா காலத்திலே தான் நாம் ஆட்சி பொறுப்பை ஏற்றுக் கொண்டோம் அப்பொழுது முதல்வர் பொறுப்பிற்கு வந்த நம்முடைய முதலமைச்சர் மக்களை காப்பது ஒன்றே முதன்மை பணி என மக்களை காக்கும் பணியில் ஈடுபட்டார்.

அப்போது தமிழ்நாட்டின் கஜானா காலியாக இருந்தது. அதிமுக ஆட்சியிலே நிதி என்பது எதையுமே விட்டு வைக்காமல் கஜானாவை காலி செய்துவிட்டு அவர்கள் சென்றார்கள். ஆனால் அப்பொழுது இருந்த கொரோனா கால கட்டத்திலே மக்களை பாதுகாக்க வேண்டும், மருத்துவ வசதிகளை உறுதி செய்ய வேண்டும். பல நேரங்களில் சுவாச காற்றுக்கு போராடிக் கூடிய நிலை இருந்தது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு ஆக்சிஜன் கிடைப்பதற்கு ஒவ்வொரு நாளும் போராடி பெற்றோம்.

### முன்னேறிய மாநிலம்!

இது அத்தனையும் செய்த இந்த தமிழ் நாட்டை இன்று ஒரு முன்னேறிக் கொண்டிருக்கக் கூடிய மாநிலமாக இந்தியாவிலேயே முன்னேறிய ஒரு மாநிலமாக தொழில் முதலீடுகள் வரக்கூடிய மாநிலமாக மற்ற மாநிலங்களை யெல்லாம் விட முன்னிலை வகித்துக் கொண்டிருக்கக்கூடிய மாநிலமாக அதிகமாக உயர்கல்விக்கு போகக்கூடிய பிள்ளைகள் இருக்கக்கூடிய மாநிலமாக உயர்த்தி காட்டி இருக்கக்கூடிய ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி.

நம்முடைய முதலமைச்சர் முதல் கையெ முத்தாக பெண்களுக்கான விடியல் பயணம் திட்டத்தில் கையெழுத்திட்டார்கள். இன்று தமிழ் நாட்டில் நகர்ப்புறங்களில் இருக்கக்கூடிய பேருந்து நிலைய பெண்கள் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியம் கிடையாது. அதுபோல ஆட்சி பொறுப்பிற்கு வருவதற்கு முன்னால் மகளிர் உரிமைத் தொகையை வழங்குகிறேன். ஆயிரம் ரூபாய் உங்களுக்காக நான் வழங்குவேன் என்று முதலமைச்சர் அவர்கள் உறுதி அளித்தார்கள்.

எவ்வளவோ நிதி நெருக்கடி... அங்கே ஒன்றியத்தில் இருக்கக்கூடிய மோடி ஆட்சி பிஜேபி ஆட்சி தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய நிதியை சரியா கொடுப்பது இல்லை. அதிமுக ஆட்சியில் கஜானாவை காலியாக வைத்து விட்டுப் போய் விட்டார்கள். இருந்தாலும் ஒரு கோடி 15 லட்சம் சகோதரிகளுக்கு ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய் தந்து கொண்டிருக்கக்கூடிய ஆட்சி நம்முடைய முதலமைச்சரின் ஆட்சி.

இன்னும் சில பேர், எங்களுக்கு வரலையே





தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சிவகிரி பேரூர் தலைவர் கலைஞர் திடலில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார்,மாநில மருத்துவரணி துணை செயலாளர் செண்பக விநாயகம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு,பரமகுரு,சீனிவாசன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச்செல்வி,வாசு வடக்கு ஒன்றிய செயலாளர் பொன். முத்தையாபாண்டியன்,சிவகிரி பேரூர் செயலாளர் சேதுசுப்பிரமணியன், மாவட்ட மருத்துவ அணி தலைவர் சுமதி,பேரூராட்சி தலைவர் கோமதி சுந்தரவடிவேலு உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

நாங்க எழுதி கொடுத்தோமே என்று கேட்கலாம். விடுபட்ட சகோதரிகளுக்கும் விரைவில் முகாம்கள் நடத்தப்பட்டு அவர்களுக்கும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என முதலமைச்சர் உறுதியளித்துள்ளார்.

எத்தனையோ கட்சி இருக்கும் தேர்தல் நேரத்தில் வாக்குறுதி கொடுப்பார்கள். ஆனால், நிறைவேற்ற மாட்டார்கள். அதிமுக ஆட்சியிலே எத்தனையோ வாக்குறுதி கொடுத்தார்கள். ஏதாவது நிறைவேற்றி னார்களா? இல்லை. கலைவர் கலைஞர் இலவச வண்ண தொலைகாட்சி பெட்டி தருகிறேன் என்று சொன்னார். எத்தனையோ வருஷத்துக்கு முன்னாடி கொடுத்த தொலைகாட்சி பெட்டி இன்னைக்கும் பல பேர் வீடுகள்ல வேல செஞ்சிட்டு இருக்கு. நடுவுல மிக்சி, கிரைண்டர் எல்லாம் வந்துது, அது வந்ததோடு சரி. இப்படி மக்களுக்கு கொடுக்கக் கூடிய வாக்குறுதிகளை நிறைவேற்றி யிருக்கிறார் நமது முதல்வர்.

ஆனால் வாக்குறுதியே கொடுக்காமலும் பல திட்டங்களை முதல்வர் தளபதி நிறைவேற்றி வருகிறார். மக்களைத் தேடி மருத்துவம் என்னும் மகத்தான திட்டம். தமிழ்நாட்டில் கோடிக் கணக்கான மக்களை சென்று அடைந்திருக்கக் கூடிய திட்டம். இரு கோடி மக்கள் பயன்பெறுகிறார்கள்.

உலகத்ததில் வேறு எங்கேயும் இப்படி இல்லை. மருத்துவர்கள் வீடு தேடி வந்து சோதனைகளையும் சிகிச்சைகளையும் செய்து கொடுக்கக் கூடிய திட்டம் இப்படி வேறு எங்கும் இல்லை. அதனாலதான் நமது அமைச்சரை அழைத்து ஐக்கிய நாடுகள் அமைப்பே பாராட்டி யிருக்கிறது. அமெரிக்காவில் மருத்துவர்களின் அப்பாயின்ட்மென் ட்டுக்கு மாதக் கணக்கில் காத்திருக்க வேண்டும். ஆனால் தமிழ்நாட்டில் தான், வீடு தேடி வந்து மருத்துவர்களே மருந்து, மாத்திரைகள், பிசியோதெரபி பயிற்சி உள்ளிட்டவற்றை அளிக்கிறார்கள். இப்படி யாருக்கு என்ன தேவையோ அவற்றைக் கண்டறிந்து அவர்களுக்கு அளிப்படுதான் திராவிட மாடல் ஆட்சி.

### காலை உணவுத்திட்டம்!

அதேபோல காலை உணவுத் திட்டம். இன்று இத்தனை சகோதரிகள் வந்திருக்கீங்க. காலை உணவு திட்டம் வர்றதுக்கு முன்னாடி என்ன பண்ணுவீங்க? பிள்ளைங்க பள்ளிக் கூடத்துக்கு போகும். ஆனா சாப்பிடாது. டைம் ஆயிரும். நீங்க சமைச்சு முடிக்க முடியாது. வேலைக்கு போகக்கூடியவர்கள் நிறைய பேர் இருப்பீங்க. அதனால், சமைச்சு முடிக்க முடியாது. வேலைக்கும் சரியான நேரத்துக்கு போகணும். சமைச்சு முடிக்கிறதும் கஷ்டம். அவங்களை சாப்பிட வைப்பது அதுக்கு மேல கஷ்டம். மதியம் வரைக்கும் பிள்ளைகள் பட்டினியோடு உட்கார்ந்து இருக்கும். நீங்க எங்க வேலைக்கு போனாலும், அதையே நினைத்து பதறிட்டே இருப்பீங்க பிள்ளை, பிள்ளை பசியோட இருக்கே மத்தியானம் எப்ப சாப்பிடுமோ ஒழுங்கா சாப்பிடுமோ இல்லையோ என.. பிள்ளையும் பசியோட உட்கார்ந்து பாடத்தைக் கவனிக்க முடியாத சோர்ந்து போயிடுவாங்க

அதனால் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய எந்த தாயும் பதற்றத்தோடு தன்னுடைய பிள்ளையை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பக்கூடாது அங்க பள்ளிக்குப் போகக்கூடிய நம்முடைய மாணவர்கள் மாணவிகள் யாரும் பசியோடு மதிய உணவு வரும் வரை காத்திருக்கக்கூடாது என்று கொண்டு வரப்பட்ட திட்டம் தான் காலை உணவு திட்டம்.

இது தாய்களுக்கும் ஒரு பெரிய விடுதலை உணர்ச்சியை தரக் கூடிய திட்டம். காலையிலேயே எழுந்து சமைத்து, ஒரு பெரிய சுமையை தன்னுடைய தலையில் தூக்கி வைத்திருக்க வேண்டிய அந்தக் கவலை இல்லை பிள்ளைகளும் பள்ளிக் கூடத்திற்கு கிளம்பி போய் அங்க சுவையான உணவு கொடுக்கிறார்கள் என்று ஆர்வத்தோடு போகக் கூடிய ஒரு நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

இந்த திட்டம் கொண்டு வரப்பட்ட பிறகு ஒரு ஆய்வை எடுத்திருக்காங்க. அதில் பிள்ளைகள் இன்னும் அதிகமான கவனத்தோடு படிக்கிறார்கள் என்று தெரியவந்திருக்கிறது. காலை உணவுத் கிட்டத்திற்கு பிறகு 98 சதவிதம் பிள்ளைகள் நேரத்தோடு இப்போது பள்ளிக்கு வருகிறார்கள், முன்னாடியெல்லாம் கொஞ்சம் லேட்டாக வருவார்கள். ஆனால் இப்போது 98 சதவிகிதம் பிள்ளைகள் பள்ளிக்கூடம் வருவது சரியான நேரத்துலேயே என்று தெரிய வந்திருக்கிறது.

இப்படி பள்ளிக்கூடத்துக்கு வரக்கூடிய பிள்ளைகளுக்கு ஒரு திட்டம். அதை தாண்டி படிக்கக்கூடிய மாணவர்கள் படித்து முடித்துவிட்டு கல்லூரிக்குபோகிறார்கள். . ..அந்தகல்லூரிக்கு போகக் கூடிய இளைஞர்கள் இளம்பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கி உங்கள் படிப்பு எதனாலும் தடைப்படக்கூடாது என்று நினைக்கக்கூடிய ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி.

கல்லூரியில் படிக்கக்கூடிய நம்ம வீட்டுப் பிள்ளைகளுக்கு ஆயிரம் ரூபாய் பெண்களுக்கு வழங்கக்கூடிய திட்டம் புதுமைப் பெண் திட்டம். இளைஞர்கள் போய் கல்லூரியில் படிக்கும் போது அவர்களுக்கும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது தமிழ் புதல்வன் திட்டம்.

இந்தியாவிலேயே அதிகமாக உயர்கல்விக்குப் போகக்கூடிய மாணவர்கள் இருப்பது தமிழ் நாட்டில்தான். அங்கே ஒன்றிய அரசாங்கம் புதிய கல்விக் கொள்கையைக் கொண்டு வருகிறார்கள். கொண்டு வந்து நாங்க சொல்வது தான் கல்விக்கொள்கை நீங்க எங்களிடமிருந்து பாடம் படிக்கணும் என்கிறார்கள். ஏதோ ஆசிரியர்களைப் போல ஒன்றிய அரசாங்கம், புதிய கல்விக் கொள்கையை கொண்டுவந்து இதை செயல்படுத்து, இந்தியை கற்றுக் கொடு என்கிறார்கள்.

இன்னும் 30 வருஷம் கழித்து உயர் கல்வியில் 50% என்ற இலக்கை எட்டிவிடுவோம் என்று இப்போது சொல்கிறார்கள். ஆனால் தமிழ்நாடு இப்போதே உயர் கல்விக்கு போகும் மாணவர்களின் 50% தாண்டிவிட்டோம். சொல்லிக் கொடுக்கும் நிலையில் நாம் இருக்கிறோம். நம்மிடம் பாடம் படிக்கும் நிலையில் அவர்கள் இருக்கிறார்கள்.

ஆனால் கற்றுக் கொள்ளும் இடத்தில் உட்கார்ந்துகொண்டு, நம்மிடம் புதிய கல்விக் கொள்கையை ஏற்க வேண்டும் இல்லையென்றால் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு தர வேண்டிய 2 ஆயிரம் கோடி நிதியை தர மாட்டோம் என்று சொல்கிறார்கள். அதற்கு நமது முதல்வர் பத்தாயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும், உங்களது புதிய கல்விக் கொள்கையை ஏற்கமாட்டோம் என்று பதில் கொடுத்தார்.

ஒரு மாநிலத்துக்கு நலத்திட்டங்கள் தேவை தான். ஆனால் அதேநேரம் சுயமரியாதை என்பது அதைவிட முக்கியம். சாப்பாடு இருக்கு, படிப்பு இருக்கு, வேலை இருக்கு உயர்ந்து கொண்டே போகிறோம் தொழில் முதலீடுகள் தமிழ்நாட்டுக்கு வருகின்றன. பாதுகாப்பான ஒரு சூழ்நிலையிலே வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். ஆனால் சுயமரி யாதை இல்லாமல் வாழ முடியுமா? முடியாது.

### சிங்கம்போல் சீறி நிற்கும் ஆட்சி!

அந்த சுயமரியாதையை ஒன்றிய அரசாங்கம் அடிக்கடி தட்டிப் பார்க்கிறது. ஆனால் ஒவ்வொரு முறையும் எதிர்த்து சிங்கம்போல் சீறி நிற்குக்கூடிய ஆட்சி திராவிட முன்னேற்ற கழக ஆட்சி.

எல்லா மசோதாவிலும் தமிழ்நாட்டின் உரிமைகளை கொஞ்சம் கொஞ்சமாக பறிக்க முயற்சி செய்கிறார்கள். இப்ப தொகுதி சீரமைப்பு மறு சீரமைப்பு என்று சொல்லி மக்கள் தொகை கணக்கெடுக்கிறோம், அதன் அடிப்படையிலே நாங்கள் தொகுதிகளை உருவாக்குவோம் என்கிறார்கள்.

தமிழ்நாட்டில் இன்னைக்கு நிறைய படித்தவர்கள் இருக்கிறார்கள் பெண்கள் வேலைக்குச் செல்கிறார்கள், படித்தவர்களாக பட்டதாரிகள் தான் இருக்கிறார்கள். பிஹெச்டி. நாட்டி லேயே அதிகமாக படித்துக்கொண்டிருக்கக் கூடிய பெண்கள் தமிழ்நாட்டில்தான் அதிகம்.

இதற்கெல்லாம் காரணம், நாம் மக்கள் தொகையை கட்டுப்படுத்தி கல்வி சுகாதாரத்தில் முன்னேறியதுதான். ஆனால், மக்கள் தொகையை கட்டுப்படுத்தியதற்காக நமக்கு தண்டனை கொடுக்கும் வகையில் தொகுதிகளை குறைக்க வேண்டும் என்று துடிக்கிறார்கள்.

இங்கே நமது நாடாளுமன்ற உறுப்பினருக்கு தெரியும். ஐந்து மாதமாக 100 நாள் வேலைத் திட்ட நிதியை தமிழ்நாட்டுக்குக் கொடுக்கவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதினார்கள். பதில் இல்லை. அமைச்சர்களோடு சென்று அங்க இருக்கக் கூடிய அமைச்சர்களை சந்தித்து, ஐந்து மாதமாக 100 நாள் வேலைத் திட்ட சம்பளத் தொகை நிறுத்தப்பட்டிருக்கிறது நீங்கள் தரவேண்டும் என்று சொன்னோம். பதில் இல்லை தருவோம் தருவோம் தருவோம் என்றார்களே தவிர தர வில்லை. முதலமைச்சர் உத்தரவுப்படி தமிழ் நாட்டு எம்பிக்கள் நாடாளுமன்றத்தை நிறுத்தி வைத்து போராடினோம். அதனால் ஐந்து மாதமாக வராத 100 நாள் வேலைத் திட்ட நிதியில் இப்போது பாதியை விடுவித்திருக்கிறார்கள்.

அவர்கள் என்ன நினைக்கிறார்கள்.... தமிழ் நாட்டில் 39 எம்.பி.க்கள் இருக்கிறார்கள். தமிழ் நாட்டின் உரிமைகளுக்காக முதலமைச்சர் சொன்னால் அவர்கள் போராடுவார்கள். அந்த எண்ணிக்கையை குறைத்துவிட்டால், தமிழ் நாட்டின் குரல் இங்கே எடுபடாது, ஒவ்வொரு வழியிலும் நம்முடைய குரலை முடக்குவதற்கு உரிமைகளைப் பறிப்பதற்குத் திட்டமிடுகிறார்கள்.

அதனால்தான் முதலமைச்சர் அவர்கள் இந்த தொகுதி மறுசீரமைப்பு என்பது நியாயமான ஒன்றாக நடக்க வேண்டும் இல்லை என்றால் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று அத்தனை முதலமைச்சர்களையும் அழைத்து சென்னையிலே ஒரு கூட்டத்தை நடத்தி காட்டினார்கள். எங்கள் உரிமையை நாங்கள் விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று ஆணித்தரமாக தெள்ளத்தெளிவாக அங்கே அறிவித்தார்கள்.

இப்படி தமிழ்நாட்டுக்கு தொடர்ந்து துரோகம் செய்துகொண்டு இருக்கும் கூடியவர்களோடு தான் இன்னும் அதிமுக கூட்டணி வைத்திருக்கிறது. ஆனால் அதிமுக நம்மைப் பார்த்து எத்தனையோ கேள்விகளை கேட்கிறது.

### பொள்ளாச்சியில் நடந்தது என்ன?

பொள்ளாச்சியில் என்ன நடந்தது? அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த அந்த காலகட்டத்திலே, அங்கிருக்கக்கூடிய எத்தனையோ ஆண்டுகளாக யாரும் தைரியமாக அந்தப் பாதிக்கப்பட்ட பெண்கள் வெளியில வந்து வழக்குப் பதிவு செய்யவோ, அதைப் பற்றிப் பேசவோ தைரியம் வரவில்லை.

ஏனென்றால் அந்தக் குற்றத்தைச் செய்தவர்கள் அப்போது ஆட்சியில் இருந்தவர்களுக்கு நெருக்கமானவர்கள். அந்த பெண்கள் மிரட்டப்பட்டார்கள். ஆண்டுக்கணக்கிலே அங்கிருக்கும் எத்தனையோ பெண்கள் பாதிக்கப்பட்டார்கள். அவர்களை மிரட்டினார்கள் வண்முறைக்கு ஆளாக்கினார்கள். அவர் கத்திய குரல் நம்முடைய காதுகளில் இன்னும் வலியோடு ஒலித்துக்கொண்டு இருக்கிறது.

ஆனால் முதல் முதலாக ஒரு பெண் வெளியே வந்து உண்மையைச் சொல்லி வழக்குப் பதிவு செய்யப்பட வேண்டும் என்று சொன்னபோது அந்தப் பெண்ணுடைய அண்ணன் மிரட்டப்படுகிறார், அந்தப் பெண் அச்சுறுத்தப்படுகிறார்.

இது நடக்கக்கூடாது, நியாயம் கிடைக்க வேண்டும் என்ற அந்தப் போராட்டத்தை நமது இன்றைய முதலமைச்சர் அவர்களும் திராவிட முன்னேற்ற கழகத்தினரும், திராவிட முன்னேற்றக் கழக மகளிரணியும் கையில் எடுக்கிறார்கள்.

எதிர்கட்சிகளெல்லாம் ஒருமித்த குரலிலே நியாயம் கிடைக்க வேண்டும் என்று போராடுகிறோம். ஊடகங்கள் போராடுகின்றன. அப்பொழுது கூட தன்னுடைய கட்சிக்காரர்களைப் பாதுகாத்து மற்றவர்கள் மேலதான் எடப்பாடி பழனிசாமி வழக்குப் பதிவு செய்கிறார். முக்கியமான குற்றவாளிகளை விட்டுவிடுகிறார்.

இப்போது இந்த வழக்கில் நீதிமன்றத்தில் யாருக்கு அதிகமாக தண்டனை கொடுத்திருக்காங்களோ, அவங்க பேரை எல்லாம் விட்டுவிடுகிறார். நாம் தொடர்ந்து போராடுகிறோம். அதற்கு பிறகுதான் நீதிமன்றத்தை அணுகிய பிறகுதான் நீதி கிடைத்தது.

எடப்பாடி பழனிசாமி சிபிஐ விசாரித்ததில் ஒன்றும் பெருமை இல்லை என்று சொல்கிறார். ஆனால் அப்போதைய எடப்பாடி பழனிசாமியுடைய ஆட்சி மீது அதிமுக ஆட்சி மீது நம்பிக்கை இல்லை. அதனால்தான், அதனால சிபிஐக்கு மாற்றப்பட்டது. அப்போது எதிர்க்கட்சி தலைவராக இருந்த நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் மக்களுக்கு ஒரு உறுதி கொடுத்தார்கள். ‘ எங்க ஆட்சி வந்த உடன் அங்கே வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட பெண்களுக்கு நியாயம் கிடைக்கும். கிடைக்கச் செய்வோம் ‘என்று சொன்னார்.

இன்றைக்கு நீதிபதி தன்னுடைய தீர்ப்பை தரக்கூடிய அந்த நேரத்திலே, ஒரு சாட்சி கூட பிறழ் சாட்சி இல்லை என குறிப்பிட்டார்.

எல்லாரும் தைரியமாக வந்து உண்மையைச் சொன்னார்கள் ஏனென்றால் அவர்களுக்குப் பாதுகாப்பாக நின்றது திராவிட முன்னேற்றக் கழக அரசு. அந்த பெண்களுக்கு நியாயம் கிடைத்திருக்கிறது.

இங்கே இருக்கக் கூடிய சகோதரிகள் எத்தனையோ முறை அந்த பெண்களுடைய நிலையைப் பற்றி நீங்கள் கவலைப்பட்டிருப்பீர்கள். இன்றைக்கு உண்மையாகவே சாகும் வரை அவர்களுக்கு ஆயுள் தண்டனை என்று நீதிமன்றம் தண்டனை வழங்கியிருக்கிறது. ஆனால் அந்த தண்டனை வழங்கப்பட்டவர்களை பாதுகாத்தது அதிமுக ஆட்சி. எடப்பாடி பழனிசாமி ஆட்சி. அந்த பெண்களுக்கு நீதி கிடைக்க துணையாக இருந்த ஆட்சி திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி.

### தொழில் முதலீடுகள்!

இந்த பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுடைய ஒரு மிக முக்கியமான கோரிக்கை இங்கே தொழில் வளர்ச்சி வேண்டும் என்று. பொதுவாகவே எந்த மாநிலத்திலும் தலைநகரத்தை சுற்றித்தான் முதலீடுகளும் வளர்ச்சியும் இருக்கும்., அங்கே தான் வேலை வாய்ப்புகள் இருக்கும்.

ஆனால் நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் சென்னை, கோவையை மட்டுமே சுற்றி தொழில் வளர்ச்சி இருப்பது நியாயம் இல்லை. தமிழ்நாட்டின் எல்லா பகுதிகளிலும் தொழில் வளர்ச்சி உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இன்று இந்த பகுதியிலேயே சங்கரன்கோவில் சிப்காட் முன்னூறு கோடிக்கு மேல் ஒதுக்கீடு செய்யப்பட்டு சிப்காட் வளாகம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

கிட்டத்தட்ட 3000 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கக்கூடிய சிப்காட் வளாகம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இப்படி தமிழ்நாட்டில் எல்லா பகுதிகளிலும் இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு இளம் பெண்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய ஆட்சி திராவிட முன்னேற்ற கழக ஆட்சி. எல்லோருக்குமான ஆட்சி நடைபெற வேண்டும் என்ற நினைப்பது தான் திராவிட மாடல் ஆட்சி.

தொடர்ந்து முதலமைச்சர் சொல்லிக் கொண்டு வருகிறார்... அதிமுகவும் பாஜகவும் கூட்டணி இல்லை என்று நடுவில் ஏமாற்றி கொண்டிருந்தார்களே... அதெல்லாம் வெறும் பித்தலாட்டம் மக்களுக்கு செய்து கொண்டிருக்கக் கூடிய துரோகம், தேர்தல் வரும் நேரத்தில் இணைந்து விடுவார்கள் என்று முதலமைச்சர் சொல்லிக்கொண்டிருந்தார். இன்று முதல்வர் சொன்னது உறுதியாகியிருக்கிறது.

பிஜேபியின் பி டீம் தான் அதிமுக. அப்படிப் பட்ட துரோகத்தை தமிழ்நாட்டுக்கு செய்யக்கூடியவர்களை இந்த தேர்தலிலே அடையாளம் கண்டு தமிழ்நாட்டில் அவர்களுக்கு இடமில்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

மக்களுக்கு எதுவுமே செய்யாமல் திடீரென வந்து மக்களைப் பற்றி எந்த கவலையும் அக்கறையும் இல்லாமல் ஒரு தேர்தலில் தமிழ் நாட்டை மாற்றி விடுகிறேன் என்று சில பேர் வாக்குறுதி தந்து கொண்டிருக்கலாம். அதில் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

ஏனென்றால் இதையெல்லாம் நாம் பல முறை பார்த்திருக்கிறோம். இந்த வாக்குறுதிகள் எல்லாம் காற்றில் கலந்த பேரோசையாக மாறுவதை பார்த்திருக்கிறோம்.

மக்களுக்காக உழைக்கக்கூடிய மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற க்கூடிய... நீங்கள் மட்டுமல்ல உங்களுடைய அடுத்த அடுத்த தலைமுறையின் உரிமைகளுக்காகவும் வளர்ச்சிக்காகவும் போராடவும் சிந்திக்கவும் கூடிய ஒரே ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தான்... நமது தலைவர் முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் தான். இந்த நல்லாட்சி நீடிக்க வேண்டும். அதற்கு நாம் அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும்.”

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்..பி. உரையாற்றினார்.

சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினரும், தென்காசி வடக்கு மாவட்ட பொறுப்பாளருமான ராஜா, தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீ குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு, சீனிவாசன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்!